இந்திய உச்ச நீதிமன்றம்

2022-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 02-ம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் முனைவர். தனஞ்சய் ஒய். சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் செல்வி. ஹிமா கோஹ்லி

குற்றவியல் மேல்முறையீடு எண்கள். 1408-1409/2022

எக்ஸ் ஒய் இசட் ...மேல்முறையீட்டாளர்

-எதிர்-

அபிஷேக் மற்றும் ஒருவர் ....எதிர்மேல்முறையீட்டாளர்கள்

இளவர் நீதிமுறைச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000: பிரிவு 7அ-இளவர் நீதிமுறை(குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகள், 2007- விதி12(3)(பி) - இளஞ்சிறார் அடிப்படையிலான வாதம் - முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் பிற நபர்களால் தான் கூட்டு பாலியல்

வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டதாக மேல்முறையீட்டாளர் குற்றம் சாட்டினார் - குற்றங்கள் நடந்து மூன்று முதல் நான்கு மாதங்களுக்குப் பிறகு, 24 ஜூலை 2015 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது - இளஞ்சிறார் அடிப்படையிலான வாதம் - முதல் எதிர்மேல்முறையீட்டாளரால் சமர்ப்பித்த மெட்ரிகுலேஷன் சான்றிதழ் போலியானது என்று ஜேஎம்எஃப்சி கண்டறிந்தது, எனவே நீதிமன்ற நடவடிக்கைகளில் வேண்டுமென்றே போலியான ஆவணங்களை பயன்படுத்தியதற்காக முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தியது - விசாரணை நடத்தும் போது, மாவட்ட மருத்துவ வாரியத்தின் கருத்தை கேட்ட அமர்வு நீதிபதி, அதன் அடிப்படையில், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சம்பவம் நடந்த நாளில் சிறார் அல்ல என்று முடிவு செய்தார் -முதல் எதிர்மேல்முறையீட்டாளரானவர் உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனுவை தாக்கல் செய்தார் - மேல்முறையீட்டில், தீர்வு: விசாரணையின் போது முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 9ஆம் வகுப்புக்கு மேல் படித்திருக்கவில்லை என்றும், எனவே அவர் பதின்மக் கல்வி தேர்வுக்கு வரவில்லை என்றும் கூறினார் - பதின்மக் கல்வி சான்றிதழ் ஜே.எம்.எஃப்.சி.யால் பொய்க் கையொப்பமிடப்பட்டதாக கண்டறியப்பட்டது. பதின்மக் கல்வி சான்றிதழ் இல்லாத நிலையில், முதன்முதலில்

பயின்ற பள்ளியின் பிறப்புச் சான்றிதழ்தான் நம்பியிருக்க முடியும் - பள்ளி இயக்குநரும், முதல் பிரதிவாதியின் உறவினருமான அவர், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி தொடர்பான எந்த ஆவணமும் சேர்க்கை கட்டத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று ஒப்புக் கொண்டார் - முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார், மாணவர் பதிவேட்டில் உள்ள பிறந்த தேதி தவறானது என்று ஒப்புக் கொண்டார் - இந்த சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, அமர்வு நீதிபதி பள்ளியில் இருந்து பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நம்பகத்தன்மையை சந்தேகிப்பதில் சரியாக இருந்தார் - நகராட்சி அதிகாரியால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழை அமர்வு நீதிபதி நம்பவில்லை, ஏனெனில் ஆவணங்கள் ஊழியர்களால் முறையற்ற முறையில் பராமரிக்கப்பட்டன மற்றும் மோசடியாகத் திருத்தப்பதாகவும் கண்டறியப்பட்டது - கண்டுபிடிப்பை நிராகரிக்க சரியான அடிப்படை எதுவும் இல்லை - மருத்துவ குழுவின் அறிக்கையிலிருந்து முதல் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு இளவர் அல்ல என்பது தெளிவாகிறது -முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தை ஆதரிக்கும் வகையில் அவர் பயன்படுத்திய ஆவணம் புனைக்கப்பட்டது - உயர் நீதிமன்றம் இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தை ஏற்றது தவறானது -

பிரிவுகள் 193,465,466,468,471,363,366அ,376,506,120பி - பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012 - பிரிவுகள் 3,4.

மேல்முறையீட்டை அனுமதித்த நீதிமன்றம் , பின்வருமாறு தீர்வளித்தது :

தீர்வு: 1. 2007 விதிகளின் விதி 12(3) (அ), ஒரு குழந்தை அல்லது சிறார்களின் "வயது நிர்ணய விசாரணை"யின் நோக்கங்களுக்காக பின்வரும் ஆவணங்களைச் சார்ந்து சான்றுகளைப் பெறலாம். (1) பதின்மப்பள்ளி அல்லது அதற்கு சமமான சான்றிதழ்கள் (2) முதன்முதலில் பயின்ற பள்ளியின் பிறப்புச் சான்றிதழ்; அல்லது (3) மாநகராட்சி அல்லது நகராட்சி அதிகாரி அல்லது பஞ்சாயத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ். கூறு (அ) இன் உட்கூறுகள் (i) மற்றும் (ii) ஆகியவற்றின் முடிவில், விதி "மற்றும் அது இல்லாத நிலையில்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. மேலும் மேற்கூறிய ஆவணங்களில் எதுவும் இல்லாத பட்சத்தில் முறையாக அமைக்கப் பட்ட மருத்துவ வாரியத்திடம் மருத்துவக் கருத்தைப் பெறலாம்.[பத்தி 19][430-சி-டி].

2. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார், விசாரணையின் போது, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 9 ஆம் வகுப்புக்கு மேல் படிக்கவில்லை என்றும்,

எனவே அவரது மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு வரவில்லை என்றும் திட்டவட்டமாகக் கூறினார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் காவல் வைப்பு கட்டத்தில் மெட்ரிகுலேஷன் சான்றிதழை சமர்ப்பித்தார், இது விசாரணையின் பின்னர் ஜே.எம்.எஃப்.சியால் போலியானது என்று கண்டறியப்பட்டது. இது குறிப்பாக 4வது கூடுதல் அமர்வு நீதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மெட்ரிகுலேஷன் சான்றிதழ் இல்லாத நிலையில், முதலில் படித்த பள்ளியின் பிறப்புச் சான்றிதழை நம்பியிருக்க முடியும். பள்ளி தயாரித்த 'மாணவர் பதிவேட்டில்' முதல் பிரதிவாதியின் பிறந்த தேதி 30 ஜூன் 1999 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையின் போது, பாதுகாவலர் மற்றும் வழிகாட்டி பொதுப் பள்ளியின் இயக்குநரான அ.சா.4, முதல் குற்றம் சாட்டப்பட்டவரின் பிறந்த தேதி தொடர்பான எந்த ஆவணமும் சேர்க்கை கட்டத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று ஒப்புக்கொண்டார். முதல் எதிர்மனுதாரரின் தாயாரும் குறுக்கு விசாரணையில் " மாணவர் பதிவேட்டில்" பிறந்த தேதி தவறு என்று ஒப்புக் கொண்டுள்ளார். கூடுதலாக முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தந்தையின் தொழில் ஆரம்பத்தில் ஆசிரியராகக் குறிப்பிடப்பட்டது. அது பின்னர் சேவைக்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார் குறுக்கு விசாரணையின்போது தனது

கணவர் ஆசிரியரோ அல்லது அவர் எந்த சேவையும் செய்யவில்லை என்பதை ஒப்புக் கொண்டார். அ.சா.4. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் உறவினர் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேற்கூறிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு 4வது கூடுதல் அமர்வு நீதிபதி பள்ளியில் இருந்து பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நம்பகத்தன்மையை சந்தேகித்தது சரிதான்.[பத்தி 25 & 26][432-ஜி-எச்;433-பி-ஈ]

3. இந்த நடவடிக்கைகளில் ஏப்ரல் 18, 2022 தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறப்புச் சான்றிதழைத் தேடுவதற்கு ஐந்து பேர் கொண்ட குழுவை சத்னா மாநகராட்சியால் அமைத்தது. முறையான ஆய்வுக்குப் பிறகு, 18.4.2002 தேதிக்குரிய பதிவு எண்.1545 கொண்ட பதிவு ஏதும் இல்லை என்பதும், கடைசிப் பதிவு பதிவு எண் 1544 என்பதும் தெரிய வந்தது. எனவே முதல் எதிர்மேல்முறையீட்டாளர் தனது சிறார் உரிமை கோரலுக்கு ஆதரவாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் புனையப்பட்டவை மற்றும் கையாளப்பட்டவை என்பதும் தெளிவாகிறது. இந்தச் சூழ்நிலையில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் இளமையைத் தீர்மானிக்க நகராட்சி ஆணையத்தால் வழங்கப்பட்ட போலியான பிறப்புச் சான்றிதழை நம்பியதில் உயர்நீதிமன்றம் தவறு

செய்துள்ளது என்று இந்த நீதிமன்றம் காண்கிறது [பத்தி 28 & 30][433-ஜி-எச்-434-அ-பி]

அஷ்வானி குமார் சக்சேனா எதிர் மத்தியப்பிரதேச மாநில அரசு (2012) 9 எஸ்சிசி 750: [2012] 10 எஸ்சிஆர் 540; அபுசார் ஹுசைன் எதிர் மேற்கு வங்காள மாநில அரசு (2012) 10 எஸ்சிசி 489:[2012] 9 எஸ்சிஆர் 244; சஞ்சீவ் குமார் குப்ட எதிர் உத்திரப்பிரதேச மாநில அரசு (2019) 12 எஸ்சிசி 370: [2019] 9 எஸ்சிஆர் 735 - ஆகிய வழக்குகள் மூலம் சார்வுறப்பட்டுள்ளது

பராக் பதி எதிர் உத்தரப்பிரதேச மாநில அரசு (2016) 12 எஸ்சிசி 744: [2016] 2 எஸ்சிஆர் 1089; ரிஷிபால் சிங் சோலங்கி எதிர் உத்தரப்பிரதேச மாநில அரசு 2021 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 1079 குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>பார்வையிடப்பட்ட தீர் முடிவுகள்</u>

[2012] 10 எஸ்சிஆர் 540	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 21
[2012]9எஸ்சிஆர் 244	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 22
[2016] 2 எஸ்சிஆர் 1089	குறிப்பிடப்பட்டது	பத்தி 23

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள். 1408-1409 /2022.

உயர்நீதிமன்றத்தின் 22.08.2016 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவில் இருந்து,

ஜபல்பூரில் உள்ள மத்தியப் பிரதேச முதன்மை அமர்வின் குற்றவியல் சீராய்வு எண்.278/2016 மற்றும் பல்வகை குற்றவியல் வழக்கு எண் 5495/2016 – ஆகியவற்றில் 22.08.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக வழக்குரைஞர்கள் ஆதித்யா கே. துபே, நிதின் சிங், தேவ்வ்ரத்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக வழக்குரைஞரகள், செல்வி. அங்கிதா சவுத்ரி, துணை ஏஜி, சூர்யநாராயண சிங், மூத்த வழக்குரைஞர், செல்வி. பிரகதி நீக்ரா,

செல்வி. பூஜா தார், பசுபதி நாத் ரஸ்தான், நிர்மல் குமார் அபஸ்தா, செல்வி. ஆயுஷி மிட்டல், விபுல் அபிஷேக், பிரகர் ஸ்ரீவஸ்தவ்.

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் டாக்டர். தனஞ்சய ஒய். சந்திரசூட் வழங்கினார்.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. குற்றவியல் சீராய்வு மனு எண் 278/2016 மற்றும் பல்வகை குற்றவியல் வழக்கு எண் 495/2016 ஆகியவற்றில் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி 22 ஆகஸ்ட் 2016 தேதியிட்ட தீர்ப்புகளிலிருந்து மேல்முறையீடுகள் எழுகின்றன. உயர்நீதிமன்றம் இந்த முடிவுக்கு எதிராக சீராய்வை அனுமதித்துள்ளது.21 டிசம்பர் 2015 தேதியிட்ட சத்னாவின் 4 வது கூடுதல் அமர்வு நீதிபதியின் முடிவுக்கு எதிராக ஒரு மறுபரிசீலனையை அனுமதித்த உயர் நீதிமன்றம், சம்பவம் நடந்த தேதியில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு சிறார் என்ற முடிவுக்கு வந்தது. உயர்நீதிமன்றம் தனது கண்டுபிடிப்புகளில் தவறு செய்துள்ளது என்றும், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் இளஞ்சிறார்

அடிப்படையிலான வாதம் புனையப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டது என்றும் கருதுகிறோம்.

3. 24 ஜூலை 2015 அன்று இந்திய தண்டனைச் சட்டம் 1860 (இ. த.ச.) இன் பிரிவுகள் 363, 366ஏ, 376, 506 மற்றும் 120பி மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012(போக்சோ சட்டம்) இன் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்ததற்காக சட்னாவில் உள்ள சிட்டிகோட்வாலி காவல் நிலையத்தில் மேல்முறையீட்டாளர் அளித்த தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை எண் 433/2015 பதிவு செய்யப்பட்டது. குற்றம் இழைக்கப்பட்ட நேரத்தில் இளவராக இருந்த மேல்முறையீட்டாளர், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் பிற நபர்களால் கூட்டு பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாக குற்றம் சாட்டினார். 24 ஜூலை 2015 அன்று எப்.ஐ.ஆர். (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்படுவதற்கு மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு முன்பு குற்றம் நடந்ததாகக் கூறப்படுகிறது. விசாரணையின் போது, குற்றங்களைச் செய்வதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் முதல் எதிர்மேல்முறையீட்டாளரையும் கைது செய்தனர்.

4. ஆகஸ்ட் 6, 2015 அன்று முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சத்னா நீதித்துறை நடுவர் முதல் வகுப்பு ("ஜேஎம்எஃப்சி") நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்ட குற்றத்தின் தேதியில் இளவர் நீதிமுறைச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 ("2000 சட்டம்") - இன் கீழ் தான் ஒரு சிறார் என்று முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மனு தாக்கல் செய்தார். அவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் உயர்நிலைப்பள்ளித் தேர்வில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் தோன்றியதற்கு மத்திய பிரதேசத்தின் மத்யமிக் சிக்ஷா மண்டல் வழங்கியதாகக் கூறப்படும் சான்றிதழ்களுடன் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி 30 ஜனவரி 1999 என்று சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. ("ஜேஎம்எஃப்சி") விசாரணை நடத்தி முதல் எதிர்மேல்முறையீட்டாளர் அளித்த சான்றிதழ் போலியானது என்று கண்டறியப்பட்டது. எனவே 20 ஆகஸ்ட் 2015 தேதியிட்ட எப்.ஐ.ஆர். (முதல் தகவல் அறிக்கை) எண் 292/2015 தேதியிட்ட பிஎஸ் சத்னாவின் சிவில் லைன்ஸ் காவல் நிலையத்தில் இதச 193,465, 466,468 மற்றும் 471 ஆகிய பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் சான்றாக வேண்டுமென்றே

புனையப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்தியதற்காக நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு உத்தரவிட்டது.

6. சத்னாவின் 4 வது கூடுதல் அமர்வு நீதிபதி 4 செப்டம்பர் 2015 தேதியிட்ட உத்தரவின் மூலம் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டார். 4வது கூடுதல் அமர்வு நீதிபதி விசாரணை நடத்தி சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. 21 டிசம்பர் 2015 தேதியிட்ட விசாரணை அறிக்கை அமர்வு நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

(1) அ.சா. 1 மாயாசிங் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார். முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 9ஆம் வகுப்புக்குப்பிறகு எந்தப் தேர்வும் எழுதவில்லை என்று கூறியிருந்தார்.

(2) காவலில் வைக்கப்பட்ட நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக போலியான பதின்மக் கல்வி மதிப்பெண் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

(3) முதல் எதிர்மேல்முறையீட்டாளர் படித்ததாகக் கூறப்படும் முதல் பள்ளி அவரது உறவினரால் நடத்தப்பட்டது.

(4) பள்ளியில் சேர்க்கைப் படிவம் கிடைக்கவில்லை மற்றும் பிறந்த மாதம் தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது; மற்றும்

(5) பிறப்புப் பதிவேட்டில் இருந்து எடுக்கப்பட்ட சான்றுகள் இடைமாற்றப்பட்டிருப்பதாகவும், திருத்தங்கள் மற்றும் மேலெழுத்துக்கள் மீது தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கையொப்பங்கள் இல்லை என்றும் கண்டறியப்பட்டது.

7. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் வயதை உறுதிப்படுத்தும் ஆவணம் கிடைக்காததால் 4வது கூடுதல் அமர்வு நீதிபதி இளவர் நீதிமுறைச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2007 ("2007 விதிகள்") இன் விதி 12(3)(பி) ன்படி மருத்துவக் கருத்தைப்பெற முடிவு செய்தார். அதன்படி 4வது கூடுதல் அமர்வு நீதிபதி முதல் எதிர்மனுதாரரை பரிசோதித்த மாவட்ட மருத்துவக் குழுவின் கருத்தை கேட்டறிந்தார். மருத்துவச் சான்றுகள் மற்றும் இலக்கியங்களின் அடிப்படையில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின்

தோராயமான வயது 17 முதல் 21 வயது வரை இருக்கும் என்று மாவட்ட மருத்துவ வாரியம் கருத்து தெரிவித்துள்ளது. 4வது கூடுதல் அமர்வு நீதிபதி முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தோராயமான வயதை 19 ஆகக் கணக்கிட்டார். இதனால் 4வது கூடுதல் அமர்வு நீதிபதி சம்பவம் நடந்த தேதியில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சிறார் இல்லை என்ற முடிவுக்கு வந்தார்.

8. இதற்கிடையில் காவல்துறை எப்.ஐ.ஆர். எண் 433/2015 இல் விசாரணையை முடித்து, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 363, 366 பிரிவுகள் (376 (2) (6), 120-பி மற்றும் 506 ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் ஆறு இணை குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக 02 நவம்பர் 2015 தேதியிட்ட ஒரு குற்றப் பத்திரிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. அதன்பிறகு காவல்துறையினர் எப்.ஐ.ஆர். (முதல் தகவல் அறிக்கை) எண் 292/2015 இல் விசாரணையை முடித்து, இந்திய தண்டனைச் சட்டத்தின் 193, 465, 466, 468, 471 மற்றும் 120 பி பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் அவரது வழக்கறிஞருக்கு எதிராக 03 டிசம்பர் 2015 தேதியிட்ட குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்தனர்.

9. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 21 டிசம்பர் 2015 தேதியிட்ட4வது கூடுதல் அமர்வு நீதிபதியின் அறிக்கைக்கு எதிராக குற்றவியல் சீராய்வு மனுவின் மூலம் மத்திய பிரதேச உயர்நீதிமன்றத்தை அணுகினார். தனிநீதிபதி 22 ஆகஸ்ட் 2016 தேதியிட்ட உத்தரவின்மூலம் சீராய்வு அனுமதித்து மனுவை ஏற்றுக்கொண்டு 24 ஜூலை 2015 அன்று எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்ட நேரத்தில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு சிறார் என்று கூறி அந்த சீராய்வு மனுவை அனுமதித்தார்.

10. மேற்கூறிய முடிவுக்கு ஆதரவாக உயர்நீதிமன்றம் பதின்மக் கல்வி அல்லது அதற்கு சமமான சான்றிதழ் இருந்தால், சம்பவம் நடந்த தேதியில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சிறார் என்பதை தீர்மானிப்பதில் முதலில் படித்த பள்ளியின் பிறந்த தேதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 1ஆம் வகுப்பில் அனுமதிக்கப்பட்டார் என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றம் தொடர்ந்தது, அங்கு அவரது பிறந்த தேதி 30 ஜூன் 1999 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சாட்னாவின் பாதுகாவலர் மற்றும் வழிகாட்டி பொதுப் பள்ளியின் இயக்குநரால் அ.சா.4 ஆல்

உறுதிப்படுத்தப்பட்டது. 18 ஏப்ரல் 2002 அன்று நகராட்சிக் கழகம் வழங்கிய பிறப்புச் சான்றிதழில் பிறந்த தேதி ஜனவரி 30 , 1999 எனக் குறிப்பிடப்பட்டிருப்பதை உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது. இந்த சூழலில், உயர்நீதிமன்றம் தீர்பளித்துள்ளதாவது :

பிறப்பு இறப்பு பதிவேட்டின்படி 18.4.2002 அன்று அனுப்புகை எண் 284 மூலம் அபிஷேக் சிங் பிறப்பு தொடர்பாக 30.1.1999 என்று நில எஸ். எண். 1545 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் நகல் அ.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது முறையே சத்னா மாநகராட்சியின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் திரு. ஹரிமங்கல்சிங்-ன் முத்திரை மற்றும் கையொப்பத்துடன் வழங்கப்பட்டது. இந்த இரண்டு ஆவணங்களும் பாதுகாவலர் மற்றும் வழிகாட்டி பள்ளியின் இயக்குநர் திரு. சந்திரமௌலியா குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்பத்துடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவரின் சேர்க்கைப் படிவம் பதிவேட்டில் இல்லை என்று விசாரணை நீதிமன்றம் மூலம் நகராட்சிக் கழகம் வழங்கிய சான்றிதழை நிராகரித்துள்ளது. இரண்டு வருட காலத்திற்குப் பிறகு சான்றிதழை வழங்க நகராட்சிக் கழகம் விசாரணை நீதிமன்றம் அந்தச் சான்றிதழானது இரண்டு ஆண்டுகள் கழித்து

வழங்கப்பட்டவை எனவும் ஏலுமை பெறவில்லை என்று கூறியது. சம்பவம் நடந்த தேதிக்கு முன்னதாக 2002 ஆம் ஆண்டு சான்றிதழ் வழங்கப்பட்டது என்பதை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. குற்றத்தின் அறிக்கை சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் 24.07.2015 அன்று தாக்கல் செய்யப்பட்டது.

11. உயர்நீதிமன்றம் 2002 இல் மாநகராட்சி வழங்கிய பிறப்புச் சான்றிதழ் தகுதியான அதிகாரியால் கையொப்பமிடப்பட்டு பதிவு எண் 1545 என்ற அனுப்புதல் எண்ணுடன் இருந்ததாலும் செல்லுபடியாகும் என்று உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது. 2015ஆம் ஆண்டு நடந்த சம்பவத்திற்காக குற்றம் சாட்டப்பட்டவர் 2002ஆம் ஆண்டில் போலி ஆவணத்தை பெற்றுக் கொள்ள எந்த காரணமும் இல்லை என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும் பிறப்புச் சான்றிதழ் போலியானது என்றோ அல்லது அது உண்மையானது என்றோ விசாரணை நீதிமன்றம் பதிவு செய்யவில்லை என்றும் உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது. இந்த அடிப்படையில் உயர்நீதிமன்றம் 4வது கூடுதல் அமர்வு நீதிபதியின் கண்டறிதலை தனது சீராய்வு அதிகாரம் கொண்டு மாற்றியது.

12. டிசம்பர் 15, 2016 அன்று இந்த நடவடிக்கைகளில் அறிவிப்பு வெளியிடப்பட்டது, விசாரணையின் போது, 18 ஏப்ரல் 2022 அன்று பின்வரும் விதிமுறைகளில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:

1. சிறார் விவகாரத்தில் நீதிமன்றம் சரியான பார்வையை உருவாக்குவதற்கு ஏதுவாக, குற்றம் சாட்டப்பட்ட அபிஷேக்சிங்கின் பிறப்புச் சான்றிதழுடன் தொடர்புடைய சத்னா மாநகராட்சியின் அசல் பதிவை மத்திய பிரதேச மாநில அரசு சமர்ப்பிக்க வேண்டியது அவசியம்.

2. நிலையான வழக்கறிஞர் மேற்கூறிய வழிகாட்டுதலைத் தெரிவிக்க வேண்டும் மற்றும் நான்கு வாரங்களுக்குள் இந்த நீதிமன்றத்தின் முன் அசல் ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

3. இந்த சிறப்பு அனுமதி மனுக்களை 17 மே 2002 அன்று வழக்கு பட்டியலில் ஏற்றுக.

13. மேற்கண்ட வழிகாட்டுதல்களின்படி மத்திய பிரதேச மாநிலத்தின் சார்பில் சத்னா கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளரால் பிரமாணப் பத்திரம் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. பதிவேடுகளை மீட்டெடுப்பதற்காக 16 மே 2022 அன்று ஐந்து அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டதாக பிரமாணப்பத்திரம் குறிப்பிடுகிறது. ஐந்து பேர்கொண்ட குழுவால் 30 மே 2022 அன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு உள்ளது.

कार्यालय के आदेश कमांक–103/स्टेनों/न.पा.नि./2022 सतना, दिनांक 16.05.2022 द्वारा अभिषेक सिंह का जन्म प्रमाण पत्र से संबंधित अभिलेख तलाशे जाने हेतु समिति का गठन किया गया समिति के सदस्यों द्वारा आदेश के परिपालन में अभिलेख तलासे गए किन्तु अभिलेखागार एवं जन्म–मृत्यु शाखा में रखे पंजीयन अभिलेख में उक्त नाम से संबंधित अभिलेख तथा पंजीयन प्राप्त नहीं हुआ निगम अधिवक्ता श्री अखिलेश गुप्ता जी से सम्पर्क किया गया तो उनके द्वारा बताया गया की मध्यप्रदेश शासन विरूद्ध अभिषेक सिंह का प्रकरण जिला न्यायालय सतना में प्रकरण कमांक ST/129/2016 विचाराधीन है जिसकी आगामी सुनवाई दिनांक 26.05.2022 को नियत है उक्त नियत तिथि को प्रकरण में संलग्न अभिलेखों के अवलोकन हेतु निगम पैनल अधिवक्ता श्री अखिलेश गुप्ता, श्री गौरव श्रीवास्तव सहायक विधि अधिकारी एवं श्री संतोष कुमार सेन सहायक ग्रेड–03 द्वारा प्रकरण की केस डायरी में केवल जन्म प्रमाण पत्र की प्रतिलिपी संलग्न पायी गई, जिसकी जानकारी नोट की गई जो निम्नानुसार है:–

- जन्म होने वाले का नाम – अभिषेक सिंह
- पिता का नाम – श्री राजेश प्रताप सिंह
- माता का नाम – श्रीमती माया सिंह
- जन्म तिथि – 30.01.1999
- जन्म स्थान – भरहुत नगर सतना
- रजिस्ट्रीकरण कमांक – 1545 एवं दिनांक 18.04.2002
- जावक कमांक – 246 दिनांक 18.04.2002

उक्त जानकारी के आधार पर जन्म–मृत्यु शाखा में रखे अभिलेख (माह अप्रैल 2002 एवं मई 2002 के पंजियन बुकलेट), वर्तमान में कार्यरत श्री ऋषि कुमार पटेल लिपिक जन्म–मृत्यु में माँगे जाने पर माह अप्रैल 2002 का पंजीयन उपलब्ध कराया गया जिसका अवलोकन किए जाने पर न्यायालय में संलग्न जन्म प्रमाण पत्र के पंजीयन कमांक (रजिस्ट्रीकरण कमांक) कमांक –1545 दिनांक 18.04.2002 की प्रविष्टी अंकित नहीं पाई गई, बल्कि निगम कार्यालय में उपलब्ध माह अप्रैल 2002 के पंजीयन में अंतिम पंजीयन 1544 तक ही है। तथा आगामी माह मई 2002 का पंजीयन बुकलेट तथा जारी रजिस्टर भी कार्यालय में उपलब्ध नहीं है, कि जानकारी जन्म–मृत्यु शाखा के लिपिक श्री ऋषि कुमार पटेल द्वारा बताया गया।

अतः वांछित प्रतिवेदन सादर प्रेषित है।

14. தொடர்புடைய பத்தியின் மொழிபெயர்ப்பு கீழே பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

"[....] மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் பிறப்பு இறப்பு கிளையில் பதிவு செய்யப்பட்ட பதிவு (பதிவு புத்தகம் ஏப்ரல் 2002 மற்றும் மே 2002) பதிவேட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பதிவு எண் 1545, 18.04.2002 இல் பதிவு செய்யப்பட வில்லை. ஏப்ரல் 2002 இல் உள்ள கடைசிப் பதிவேடு 1544 ஆகும். மேலும் 2002 ஆம் ஆண்டு மே மாதத்திற்கான பதிவுப் புத்தகம் மற்றும் வழங்கல் பதிவேடு ஆகியவை அலுவலகத்தில் இல்லை. பிறப்பு இறப்பு கிளையில் இத்தகவலை பிறப்பு இறப்பு கிளையின் எழுத்தர் திரு. ரிஷிகுமார் படேல் என்பவர் கொடுத்தார்."

15. 4வது கூடுதல் அமர்வு நீதிபதியின் அறிக்கையை நீக்கறவு செய்யும் போது உயர்நீதிமன்றம் பிறப்பு பதிவேட்டில் இருந்து எடுக்கப்பட்ட சாராம்சத்தை நம்பியுள்ளது. அதன்படி 30 ஜனவரி 1999 தேதியிட்ட முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதிக்கான நுழைவு எண்.1545 என்று விசாரணையில் பதிவிற்கு எங்கள் கவனம் செலுத்தப்பட்டது. விசாரணையில் மேற்கண்ட சாராம்சத்தில் 18 ஏப்ரல் 2002 ல் பதிவு எண் 1545 என்ற எந்தப் பதிவும்

இல்லை என தெரியவந்துள்ளது. 4வது கூடுதல் அமர்வு நீதிபதி இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தின் மீது விரிவான விசாரணை நடத்தினார். 4வது கூடுதல் அமர்வு நீதிபதியின் அறிக்கையில் இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தை ஆதரித்து புனையப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு பதிவு செய்யப்பட்டது என்ற முடிவுக்கு வருவதற்கான உறுதியான காரணங்கள் உள்ளன.

16. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வாதத்தில் பிறப்புச் சான்றிதழ் மற்றும் பிறப்புச் சான்றிதழுக்கு எதிரான தெளிவான கண்டுபிடிப்பை வழங்காமல் 2007 விதிகளின் 12(3) விதியின் கீழ் விசாரணை நீதிமன்றம் அதன்முன் சமர்ப்பிக்கப்பட்ட பிறப்பு மற்றும் பள்ளிச் சான்றிதழ்களைப் பொருத்து எந்த ஒரு முடிவும் இல்லாமல் மருத்துவக் குழுவின் கருத்தைக் கேட்டிருக்கக் கூடாது என்று சமர்ப்பிக்கப்பட்டது. 2002 ல் மாநகராட்சி வழங்கிய பிறப்புச் சான்றிதழ் சரியான ஆவணம் என வலியிறுத்தப்பட்டது. மேலும், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்ட பள்ளியின் பதிவேட்டில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி 30.06.1999 என்று குறிப்பிடப்பட்டுள்ளதை தகுதிவாய்ந்த சாட்சியான சத்னா பாதுகாவலர் மற்றும்

வழிகாட்டி பொதுப் பள்ளியின் இயக்குநர் உறுதிப்படுத்தியுள்ளார் என்று வலியுறுத்தப்பட்டது.

17. எங்கள் பகுப்பாய்வைத் தொடர்வதற்கு முன் தொடர்புடைய சட்ட விதிகளைக் கருத்தில் கொள்வது அவசியம். இளவர் நீதிமுறைச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 என்பது இப்போது ரத்து செய்யப்பட்ட 2000 சட்டத்தின் தொடர்ச்சியாகும். 2000 சட்டத்தின் பிரிவு 7ஏ எந்தவொரு நீதிமன்றத்தின் முன் சிறார் உரிமை கோரப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையை வழங்குகிறது.

"7-ஏ எந்தவொரு நீதிமன்றத்தின் முன்பும் சிறார் உரிமைகோரல் எழுப்பப்படும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை:

(1) உரிமை கோரல் எப்போது குற்றம் நடந்த தேதியில் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒரு சிறார் என்று எந்த நீதிமன்றத்திலோ அல்லது நீதிமன்ற கருத்தின் முன் இளமைத்தன்மை எழுப்பப்படும்போதெல்லாம், நீதிமன்றம் விசாரணையை மேற்கொள்ளும். தேவையான ஆதாரங்களை (ஆனால் பிரமாணப் பத்திரத்தின் பேரில் அல்ல) எடுத்துக் கொள்வது. அத்தகைய நபரின் வயதைத் தீர்மானிப்பதற்கும், அந்த நபர்

இளம் வயதினரா அல்லது குழந்தையா இல்லையா என்பதைக் கண்டறிந்து அவரது வயதை ஏறக்குறையக் குறிப்பிடும் வகையில் பதிவு செய்ய வேண்டும்.

எந்தவொரு நீதிமன்றத்தின் முன் சிறார் உரிமை கோரப்பட்டு அது அங்கீகரிக்கப்படும். எந்தவொரு கட்டத்திலும் வழக்கின் இறுதித் தீர்ப்பிற்குப் பிறகும் அத்தகைய உரிமை கோரல் இந்தச் சட்டத்தில் அவர் சிறார் என்ற பதத்தின் வயதை தாண்டினால் கூட அது இந்தச் சட்டம் அமலுக்கு வரும் நாளோ அல்லது அதற்கு முன்னரோ சட்டத்தில் உள்ள விதிகள் மற்றும் உள்ள விதிகள் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் குற்றம் நடந்த தேதியன்று ஒரு நபரை சிறார் என்று நீதிமன்றம் கண்டறிந்தால் அது பொருத்தமான உத்தரவுகளையும் தண்டனையையும் வழங்குவதற்காக வாரியத்திற்கு அனுப்ப வேண்டும். நீதிமன்றத்தால் ஏதேனும் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் அதனால் எந்த விளைவும் இல்லை என்று கருதப்படும்.

18. 2007 விதிகளின் விதி 12(3) நீதிமன்றம் அல்லது சிறார் நீதி வாரியம்("வாரியம்") மூலம் வயதை நிர்ணயம் செய்வதற்கான நடைமுறையை வழங்குகிறது. விதி கீழே பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

"12 வயதை நிர்ணயிப்பதில் பின்பற்ற வேண்டிய நடைமுறை - (1)

(2) ***

(3) சட்டத்திற்கு முரணான குழந்தை அல்லது சிறார் தொடர்பான ஒவ்வொரு வழக்கிலும் வயது நிர்ணய விசாரணை நடத்தப்படும் அல்லது வாரியம் அல்லது வழக்கு என குழுவினால் சான்றுகளைப் பெறுவதன் மூலம் நடத்தப்பட வேண்டும்.

(அ) (i) பதின்மப்பள்ளி அல்லது அதற்கு சமமான சான்றிதழ்கள் இருந்தால் மற்றும் இல்லாத நிலையில்

(ii) முதலில் படித்த பள்ளியில் (விளையாட்டுப்பள்ளியைத் தவிர) பிறந்த தேதி சான்றிதழ் மற்றும் அது இல்லாத நிலையில்

(iii) ஒரு மாநகராட்சி அல்லது நகராட்சி அதிகாரம் அல்லது ஒரு பஞ்சாயத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

(பி) மற்றும் மேற்கூறிய கூறு (ஏ) இன் (1)(2) அல்லது (3) இல்லாவிடில் மட்டுமே, முறையாக அமைக்கப்பட்ட மருத்துவ குழுவிடமிருந்து மருத்துவ கருத்து பெறப்படும், இது சிறார் அல்லது குழந்தையின் வயதை அறிவிக்கும். இது இளம் வயதினரின் வயதை அறிவிக்கும் அல்லது குழந்தை வயதை துல்லியமாக மதிப்பீடு செய்ய முடியாத பட்சத்தில் நீதிமன்றம் அல்லது வாரியம் அவர்களால் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக தேவைப்பட்டால் குழந்தை அல்லது சிறார்களுக்கு நன்மை அளிக்கும் வண்ணம் ஒரு வயது குறைவாக கணக்கிடலாம்.

மேலும் அத்தகைய வழக்கில் உத்தரவுகளை பிறப்பிக்கும்போது கிடைக்கக்கூடிய ஆதாரங்களை அல்லது மருத்துவக் கருத்தைக்

கருத்தில் கொண்டு அவரது வயது மற்றும் ஏதேனும் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகளில் ஒன்றைப் பதிவு செய்ய வேண்டும். கூறுகள் ஏ(1), (2), (3) அல்லது இல்லாத பட்சத்தில் கூறு (பி) என்பது அத்தகைய குழந்தை அல்லது சட்டத்திற்கு முரணான இளம் வயதினரைப் பற்றிய வயதுக்கான உறுதியான சான்றாகும்".

19. விதி 12(3) (அ) 2007 விதிகளின்படி ஒருகுழந்தை அல்லது சிறார்களின் "வயது நிர்ணய விசாரணை"யின் நோக்கங்களுக்காக பின்வரும் ஆவணங்களைச் சார்ந்து சான்றுகளைப் பெறலாம். (1) பதின்மப்பள்ளி அல்லது அதற்கு சமமான சான்றிதழ்கள் (2) முதன்முதலில் பயின்ற பள்ளியின் பிறப்புச் சான்றிதழ்; அல்லது (3) மாநகராட்சி அல்லது நகராட்சி அதிகாரி அல்லது பஞ்சாயத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ். கூறு (அ) இன் உட்கூறுகள் (i) மற்றும் (ii) ஆகியவற்றின் முடிவில், விதி "மற்றும் அது இல்லாத நிலையில்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. மேலும் மேற்கூறிய ஆவணங்களில் எதுவும் இல்லாத பட்சத்தில் முறையாக அமைக்கப் பட்ட மருத்துவ வாரியத்திடம் மருத்துவக் கருத்தைப் பெறலாம்.

20. அஷ்வனிகுமார் சக்சேனா எதிராக மத்திய பிரதேச மாநில அரசு (2012) 9 எஸ்சிசி 750 என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு 2000 ஆம் ஆண்டின் சட்டத்தின் 7-ஏ விதி 12(3)(ஏ) உடன் விதிகளை பரிசீலித்தது. 2007 விதிகள் விதி 12(3)(ஏ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் புனையப்பட்டதாகவோ அல்லது கையாளப்பட்டதாகவோ கண்டறியப்பட்டால் மட்டுமே வயதை நிர்ணயம் செய்ய நீதிமன்றம் அல்லது வாரியம் மருத்துவ பரிசோதனையை நடத்தலாம் என்று நீதிமன்றம் கூறியது. மேலும் வயது நிர்ணய விசாரணை நடத்துவதற்கான வழிகாட்டுதல்களை நீதிமன்றம் வகுத்தது.

"32. 2007 விதிகளின் விதி 12 உடன்படிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 7-ஏ-இன் கீழ் கருதப்படும் "வயது நிர்ணய விசாரணை" நீதிமன்றத்திற்கு ஆதாரங்களைத் தேட உதவுகிறது, அந்த செயல்பாட்டில், நீதிமன்றம் பதின்மக் கல்வி அல்லது அதற்கு சமமான சான்றிதழ்கள் இருந்தால் மட்டுமே முடியும். பதின்மக் கல்வி அல்லது அதற்கு சமமான சான்றிதழ்கள் இல்லாத பட்சத்தில் பள்ளியிலிருந்து பதின்மக் கல்வி அல்லது அதற்கு இணையான சான்றிதழ் அல்லது பிறந்த தேதியை முதலில் படித்த பள்ளியிலிருந்து அது விளையாட்டுப்பள்ளிக் கூடமாக

இல்லாமல் இருந்தால் பிறந்த தேதியை நீதிமன்றம் பெற வேண்டும். நீதிமன்றம் ஒரு மாநகராட்சி அல்லது நகராட்சி அதிகாரம் அல்லது பஞ்சாயத்து வழங்கிய பிறப்புச் சான்றிதழைப் பெற வேண்டும்(பிரமாணப்பத்திரம் அல்ல ஆனால் சான்றிதழ்கள் அல்லது ஆவணங்கள்). மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இல்லையென்றால் மட்டுமே மருத்துவ ஆலோசனையைப் பெறுவதற்கான கேள்வி எழுகிறது. வயதை சரியாக மதிப்பீடு செய்ய முடியாத பட்சத்தில் நீதிமன்றமானது பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக குழந்தை அல்லது இளம் வயதினரைக் கருத்தில் கொண்டு அதன் விளிம்பிற்குள் அவரது வயதை கருத்தில் கொண்டு பலன் அளிக்கும் வண்ணம் ஒரு வயது குறைவாக மதிப்பிடலாம்.

21. அதன் பிறகு அபுசார் ஹொசைன் எதிராக மேற்கு வங்க மாநில அரசு (2012) 10 எஸ்சிசி 489 இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விதி 12(3)(எ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்றுக் கொள்ளும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து அது ஒவ்வொரு வழக்கின்

உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப இருக்குமெனவும் மற்றும் கட்டுக்கோப்பான விதிகள் கொண்டு அணுக முடியாது என்று கூறியது.

"39.3 முதன்மையான பார்வையில் நீதிமன்றத்தை திருப்திப்படுத்தும் மற்றும் / அல்லது ஆரம்பச்சுமையை வெளியேற்றுவதற்குப் போதுமானதாக இருக்கும் எனப் பட்டியலிட முடியாது அல்லது அல்லது சிறார் குற்றவாளி என்ற அனுமானத்தை எழுப்ப போதுமானதாக இருக்கும் ஒரு குறிப்பிட்ட ஆதாரத்திற்கு என்ன எடை கொடுக்கப்பட வேண்டும் என்று விதிக்க முடியாது, ஆனால் விதிகள் 12(3)(ஏ)(1) முதல் (3) வரை குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் விதி 12ன் கீழ் மேலும் விசாரணை தேவைப்படும் குற்றவாளியின் வயது குறித்து நீதிமன்றத்தின் முதன்மையான திருப்திக்கு நிச்சயமாக போதுமானதாக இருக்கும். சட்டப்பிரிவு 313-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மிகவும் தற்காலிகமானது மற்றும் சிறார் உரிமைகோரலை நியாயப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ சாதாரணமாக போதுமானதாக இருக்காது. மேலும் பள்ளியிலிருந்து வெளியேறும் சான்றிதழ் அல்லது வாக்காளர் பட்டியல் போன்ற ஆவணங்களின்

நம்பகத்தன்மை மற்றும் / அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை ஒவ்வொரு வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தது, மேலும் அவை முதன்மையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும் என்று எந்த கடினமான விதியும் பரிந்துரைக்க முடியாது. அக்பர் ஷேக் [(2009) 7 எஸ்சிசி 415: (2009) 3 எஸ்சிசி (குற்றவியல்) 431] மற்றும் பவன் [(2009) 15 எஸ்சிசி 259: (2010) 2 எஸ்சிசி (குற்றவியல்) 522] இல் இந்த ஆவணங்கள் முதன்மையான நம்பகமானதாகக் காணப்படவில்லை, ஜிதேந்திர சிங் [(2010) 13 எஸ்சிசி 523: (2011) 1 எஸ்சிசி (குற்றவியல்) 857], ஆவணங்கள் அதாவது மேல்முறையீட்டாளரின் வயதை விசாரிக்கவும் சரி பார்க்கவும் பள்ளியிலிருந்து வெளியேறும் சான்றிதழ் மதிப்பெண் பட்டியல் மற்றும் மருத்துவ அறிக்கை போதுமானதாக கருதப்பட்டது. அத்தகைய ஆவணங்கள் முதன்மையாக நீதிமன்றத்தின் நம்பிக்கையை தூண்டினால், பிரிவு 7-ஏ-இன் நோக்கங்களுக்காக நீதிமன்றம் அத்தகைய ஆவணங்களின் மீது செயல்படலாம் மற்றும் குற்றவாளியின் வயதை நிர்ணயிப்பதற்கான விசாரணைக்கு உத்தரவிடலாம் என்று வலியுறுத்தப்பட்டது.

(முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது)

22. அபுஸார் ஹுசைன் (மேற்கண்ட) வழக்கில் இந்த நீதிமன்றம் அடுத்தடுத்து அளித்த தீர்ப்புகளில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பராக் பாட்டி எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு (2016) 12 எஸ்சிசி 744 வழக்கில், இந்த நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, குற்றம் சாட்டப்பட்டவரால் ஏதேனும் சந்தேகம் அல்லது முரண்பாடான நிலைப்பாடு எடுக்கப்பட்டால் ஒரு சிறார் வயதை நிர்ணயிப்பதற்கான விசாரணை அனுமதிக்கப்படுகிறது என்று கூறியது. இந்த வழக்கில், போலி மாற்றுச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டது என்ற அடிப்படையில் பள்ளியால் பதிவு செய்யப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவரின் பிறந்த தேதியை வாரியம் புறக்கணித்தது. வாரியத்தின் முடிவில் எந்த சட்டவிரோதத்தையும் இந்த நீதிமன்றம் காணவில்லை. ஒரு கடுமையான மற்றும் கொடூரமான குற்றம் இழைக்கப்பட்ட சூழ்நிலைகளில் குற்றம் சாட்டப்பட்டவரின் சிறார் தன்மையை தீர்மானிக்கும்போது நீதிமன்றங்கள் சாதாரண அல்லது கவலையற்ற அணுகுமுறையை பின்பற்றுவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் அவதானித்தது.

23. சஞ்சீவ்குமார் குப்தா எதிர் உத்தரப்பிரதேச மாநில அரசு (2019) 12 எஸ்சிசி 370 என்ற வழக்கில், குற்றம்சாட்டப்பட்டவரின் வயது நிர்ணய விசாரணையின் நோக்கத்திற்காக பதின்மக் கல்வி சான்றிதழின் நம்பகத்தன்மையை தீர்மானிக்க இந்த நீதிமன்றம் அழைக்கப்பட்டது. மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் வழங்கப்பட்ட மெட்ரிகுலேஷன் சான்றிதழ் முற்றிலும் மூத்த மேல்நிலைப் பள்ளியால் பராமரிக்கப்படும் பதிவுகளின் அடிப்படையில் உள்ளது என்று இந்த நீதிமன்றம் அவதானித்தது, அங்கு குற்றம் சாட்டப்பட்டவர் 5 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவராக இருந்தார். பள்ளியால் பராமரிக்கப்பட்ட பதிவுகள் எந்த அடிப்படை ஆவணங்களும் இல்லாமல் இருப்பது தெரியவந்தது. குற்றம் சாட்டப்பட்டவரின் பிறந்த தேதி குறித்து தெளிவான மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாத சான்றுகள் இருப்பதால் இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தை ஏற்க முடியாது என்று நீதிமன்றம் கூறியது, இது மற்றொரு பள்ளியின் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

24. ரிஷிபால்சிங் சோலங்கி எதிர் உத்தரப்பிரதேச மாநில அரசு 2021 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 1079 என்ற வழக்கில் , அண்மையில் வந்த மற்றுமொரு தீர்ப்பில், உத்தரப் பிரதேசத்தின் உயர்நிலைப்பள்ளி மற்றும் இடைநிலைத் தேர்வு

வாரியத்தால் வழங்கப்பட்ட மேல்நிலைப் பள்ளி சான்றிதழின் நம்பகத்தன்மையை தீர்மானிக்க இந்த நீதிமன்றம் பணிக்கப்பட்டது. பதின்மக் கல்வி சான்றிதழில் பதிவு செய்யப்பட்ட பிறந்த தேதி பள்ளி சேர்க்கைப் பதிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாகக் கூறி பதின்மக் கல்வி சான்றிதழின் நம்பகத்தன்மையை நீதிமன்றம் உறுதி செய்தது. மேலும் குற்றம்சாட்டப்பட்டவரின் பிறந்த தேதி பதின்மக் கல்வி சான்றிதழில் குறிப்பிடப்பட்டதற்கு முரணானதாக வேறு எந்த ஆவணமும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

25. தற்போதைய வழக்கில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார் விசாரணையின்போது முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 9ஆம் வகுப்பிற்கு மேல் படிக்கவில்லை என்றும் எனவே அவரது பதின்மக் கல்வி தேர்வுகளுக்கு வரவில்லை என்றும் திட்டவட்டமாக கூறினார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் காவல் வைப்பு கட்டத்தில் பதின்மக் கல்வி சான்றிதழை சமர்ப்பித்தார். இது விசாரணைக்குப் பிறகு (ஜே.எம்.எப்.சி) ஆல் போலியானது என்று கண்டறியப்பட்டது. இது 4வது கூடுதல் அமர்வு நீதிபதியின் அறிக்கையில் குறிப்பாக கவனம் அந்த அறிக்கையின் மீது செலுத்தப்பட்டது.

பதின்மக் கல்வி சான்றிதழ் இல்லாத நிலையில் முதலில் படித்த பள்ளியின் பிறப்புச் சான்றிதழை நம்பியிருக்கலாம்.

26. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார், சத்னாவில் உள்ள பாதுகாவலர் மற்றும் வழிகாட்டி பொதுப் பள்ளியில் 1 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டார் என்று கூறினார். பள்ளி தயாரித்த "மாணவர் பதிவேட்டில்" முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி 30 ஜூன் 1999 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையின்போது பாதுகாவலர் மற்றும் வழிகாட்டி பள்ளியின் இயக்குநரான அ.சா.4 முதல் குற்றவாளியின் பிறந்த தேதி குறித்த எந்த ஆவணமும் சேர்க்கை கட்டத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயாரும் குறுக்கு விசாரணையில் "மாணவர் பதிவேட்டில்" பிறந்த தேதி தவறு என்று ஒப்புக் கொண்டுள்ளார். கூடுதலாக முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தந்தையின் தொழில் ஆரம்பத்தில் ஆசிரியராகக் குறிப்பிடப்பட்டது. அது பின்னர் சேவைக்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார் குறுக்கு விசாரணையின்போது தனது கணவர் ஆசிரியரோ அல்லது அவர் எந்த சேவையும் செய்யவில்லை என்பதை ஒப்புக் கொண்டார். அ.சா.4. முதல்

எதிர்மேல்முறையீட்டாளரின் உறவினர் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேற்கூறிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு 4வது கூடுதல் அமர்வு நீதிபதி பள்ளியில் இருந்து பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நம்பகத்தன்மையை சந்தேகித்தது சரிதான்.

27. பள்ளியில் இருந்து நம்பகமான பிறப்புச் சான்றிதழ் இல்லாததால் 4வது கூடுதல் அமர்வு நீதிபதி நகராட்சி அதிகாரம் அளித்த பிறப்புச் சான்றிதழை ஆய்வி செய்தார். நகராட்சி அதிகாரத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் 18 ஏப்ரல் 2002 தேதியிட்ட நுழைவு எண்.1545 இல் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி 30 ஜனவரி 1999 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 4வது கூடுதல் அமர்வு நீதிபதி நகராட்சி அதிகாரியால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நம்பகத்தன்மையை சந்தேகித்தார். ஏனெனில் ஆவணங்கள் ஊழியர்களால் முறையாக பராமரிக்கப்படாமல் அவை சிதைவுற்றிருந்தன. இடைச்செருகல்களும் பிறப்புப் பதிவேடு திருத்தங்கள் மற்றும் மேலெழுதுதல் ஆகியவற்றில் உரிய அதிகாரியின் கையொப்பம் இல்லை என்பதும் கண்டறியப்பட்டது. 4வது கூடுதல் அமர்வு நீதிபதி நகராட்சி ஆணையத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் உண்மைத்தன்மை

குறித்து சந்தேகம் இருப்பதற்கான காரணங்களை குறிப்பாக உரைத்துள்ளார். அந்தக் கண்டுபிடிப்பை நிராகரிக்க சரியான அடிப்படை எதுவும் இல்லை.

28. இந்த நடவடிக்கைகளில் ஏப்ரல் 18, 2022 தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பிறப்புச் சான்றிதழைத் தேடுவதற்கு ஐந்து பேர் கொண்ட குழுவை சத்னா மாநகராட்சி அமைத்தது. முறையான ஆய்வுக்குப் பிறகு, 18.4.2002 தேதிக்குரிய நுழைவு எண் 1545 கொண்ட எந்தப் பதிவும் இல்லை என்று கண்டறியப்பட்டது. கடைசி நுழைவு எண் 1544 ஆகும். எனவே முதல் எதிர்மேல்முறையீட்டாளர் தனது சிறார் உரிமை கோரலுக்கு ஆதரவாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் புனையப்பட்டவை மற்றும் கையாளப்பட்டவை என்பதும் தெளிவாகிறது. இந்தச் சூழ்நிலையில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் இளமையைத் தீர்மானிக்க நகராட்சி ஆணையத்தால் வழங்கப்பட்ட போலியான பிறப்புச் சான்றிதழை நம்பியதில் உயர்நீதிமன்றம் தவறு செய்திருப்பதைக் காண்கிறோம்.

29. சத்னாவின் 4 வது கூடுதல் அமர்வு நீதிபதியால் விசாரணையின் பதிவில் இருந்து கிடைத்த கண்டுபிடிப்பு உறுதியானது. உயர்நீதிமன்றம் அந்த முடிவை

மாற்றியமைத்து இளம் வயதினரைக் கண்டறிவதில் வெளிப்படையாகத் தவறிவிட்டது. மத்திய பிரதேச அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மருத்துவக் குழுவின் அறிக்கை குறித்து நீதிமன்றத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சிறார் இல்லை என்பது மருத்துவக் குழுவின் அறிக்கையிலிருந்து தெரிகிறது. இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தை ஆதரித்து முதல் எதிர்மேல்முறையீட்டாளர்யால் நம்பியிருந்த முழு பதிவும் புனையப்பட்டது. இளஞ்சிறார் அடிப்படையிலான வாதத்தை ஏற்று உயர்நீதிமன்றம் தவறு செய்துள்ளது.

30. அதன்படி, உயர்நீதிமன்றத்தின் 22 ஆகஸ்ட் 2016 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைகளை நாங்கள் நீக்கறவு செய்கிறோம். இளஞ்சிறார் என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்ட வாதத்தை நிராகரித்து சத்னா 4வது கூடுதல் அமர்வு நீதிபதி வழங்கிய அறிக்கை நிலைநிறுத்தப்படுகிறது.

31. மேல்முறையீடுகள் மேற்கண்ட விதிமுறைகளில் அனுமதிக்கப்படுகின்றன.

32. மேல்முறையீட்டாளரின் பெயர் திருத்தப்பட்டு பதிவில் 'எக்ஸ் ஒய் இசட்' ஆக பிரதிபலிக்க வேண்டும்.

33. நிலுவையில் உள்ள மனுக்கள் ஏதேனும் இருப்பின், அவை முடித்துவைக்கப் படவேண்டும்.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."